**O.S.No. 19/2021**

**Date 02.07.2025**

**வாசா.2 வேலுச்சாமி**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

முதல் விசாரணை சாட்சியத்தை நான் படித்து பார்த்து கையொப்பமிட்டுள்ளேன் என்றால் சரிதான். முதல் விசாரணை சாட்சியத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நான் 2ம் வகுப்பு வரைபடித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க சுமாராக தெரியும். முதல் விசாரணை சாட்சியத்தில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். முதல் விசாரணையில் 1ம் பக்கத்தில் இந்த பிரதிவாதி என்னிடம் தனது அவசர நிமித்தமும், குடும்ப செலவிற்கும், விவசாய அபிவிருத்திகாகவும் வேண்டி கடந்த 04.05.2018 ல் ரூ.3 லட்சம் ரொக்கம் கடனாக பெற்றுக்கொண்டு என உள்ளது என்றால் என்னிடம் வாங்கவில்லை எனது தகப்பனாரிடம் பெற்றார். நான் உடன் இருந்தேன். நான் உறுதி கூற்றில் என்னிடம் பிரதிவாதி பணம் பெற்றுள்ளார் என்று கூறியுள்ளது உண்மையில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த முதல்விசாரணையில் 2வது பக்கத்தில் நான் எனது வழக்கறிஞர் மூலம் 10.12.2020ல் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு ஒன்றை அனுப்பினேன் என்று முதல் விசாரணையில் கூறியுள்ளது போல் நேரடியாக அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் நானும் எனது தகப்பனாரும் அனுப்பினோம். நானும் எனது தகப்பனாரும் சேர்ந்து தான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினோம் என்று வழக்கறிஞர் அறிவிப்பிலும் பிராதிலும் கூறவில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு 2 ஆண் வாரிசுகள் நானும் எனது அண்ணன் ராமையா தேவரும் ஆவோம். நானும் பிரதிவாதியும் ஒரே சமுதாயத்தை சேர்ந்தவர்கள் தான் என்றால் சரிதான். வீரசிகாமணி பஞ்சயாத்து தேர்தலில் நானும் பிரதிவாதியும் போட்டியிட்டோம் என்றால் சரிதான். மேற்படி தேர்தலில் வேற்று சமுதாயத்தை சார்ந்த நபர் பஞ்சாயத்து தலைவரானார் என்றால் சரிதான். யூனியன் அலுவலகத்தில் சிறு சிறு ஒப்பந்தம் எடுத்து பார்ப்பது எனது வேலை என்றால் சரியல்ல. விவசாய வேலை செய்கிறேன். எனது தகப்பனார் விவசாய வேலை பார்த்தார். நாங்கள் 10 ஏக்கர் நிலம் வைத்து தென்னந்ததோப்பு வைத்துள்ளோம். விவசாயத்தின் மூலமாக தான் வந்த பணத்தை எனது தகப்பனார் பிரதிவாதிக்கு பணம் கொடுத்தாக பிராதிலும், முதல் விசாரணையிலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும்

கூறவில்லை என்றால் சரியல்ல. எனது வீட்டில் வந்து பணம் வாங்கி சென்றார். எனது தகப்பனார் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் எந்த இடத்தில் பணம் பிரதிவாதி பெற்றுக்கொண்டார், அதற்காக பிராமிசரி நோட்டு எழுதி கொடுத்தார் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. எனது வீட்டில் வைத்து இரண்டு சாட்சிகள் முன்னிலையில் கொடுத்தோம். எனது தகப்பனார் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் யார் யார் முன்னிலையில் யார் பணம்கொடுத்தார் என்று குறிப்பு தெளிவாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. பிராமிசரி நோட்டில் என்னுடைய பெயரோ கையொப்பமோ இல்லை என்றால் நான் அங்குதான் இருந்தேன். சாட்சிகள் கையொப்பம்செய்தனர். பிராமிசரி நோட்டில் வேறு வேறு மையினால் அடித்து திருத்தம் செய்து எழுதப்பட்டுள்ளதால் ஏற்றுக்கொள்ளதக்கதில்லை என்றால் சரியல்ல. ஒரே மையினால் தான் எழுதப்பட்டுள்ளது. எனதுதகப்பனாரின் தற்போதைய வயது 95 ஆகும். வழக்கு 2021ல் தாக்கல் செய்யும்போது 80 வயது என தாக்கல் செய்துள்ளனர் என்றாலும், எனது தகப்பனாருக்கு 80 வயதான காரணத்தினால் பணம் ஈட்டும் வசதி கிடையாது என்றால் சரியல்ல. பிரதிவாதியும் நானும் தேர்தலில் ஒன்றாக நின்று தோல்வி அடைந்த காரணத்தினால் பிரதிவாதிக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் பிரதிவாதி எந்த பணமும் பெற்றுக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. வீட்டில் வந்து வாங்கி போனார்கள். வாதி தரப்பில் தாக்கல் செய்த வா.சா.1னின் சாட்சிகளை விசாரணை செய்தால்தான் உண்மையான நிலை தெரியவரும் என்றால் சரிதான்.

**ம.வி இல்லை.**